# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

C 8064835

1. District : மாவட்டம் சேலம் — PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு — Year: ஆண்டு 2019. — FIR No.: மு.த.அ. எண் 19/AC/2019 — Date: நாள் 11.10.2019.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018. — Sections பிரிவுகள்: 7(a) and 7(A) of the Prevention of Corruption (Amendment) Act 2018.

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 10.10.2019 — Date to : நாள் வரை —

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 1000 மணி முதல் — Time to : நேரம் வரை 17.30 மணி வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.10.2019. — Time : நேரம் 12.00 மணி.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11.10.2019 — Time : நேரம் 12.00 மணி.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியால் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 80 கி.மீ வடமேற்கு.

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி கொளத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக பொறியாளர் அறை, கொளத்தூர், மேட்டூர் TK. சேலம் மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. V. பண்டாரிநாதன் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — — (d) Nationality : நாட்டினம் இந்தியர் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் ஆய்வுக்குழு அலுவலர். — (g) Address : முகவரி சேலம், தர்மபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. V. இராமநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கொளத்தூர் (2) திரு. M. ராமச்சந்திரன், ஒன்றிய பொறியாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கொளத்தூர் (3) திரு. M. சரவணன், உதவி பொறியாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கொளத்தூர் (4) திரு. V. சிவசங்கர வேலு, பணி மேற்பார்வையாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கொளத்தூர், மேட்டூர் TK. (5) திரு. R. தேவராஜன் (தலைவர்) த/பெ ராமசாமி, DNO: 2/196, [illegible], [illegible] (Po) கொளத்தூர், மேட்டூர் TK.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 11/10/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature] 11/10/19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

11/10/2019 - 15.00hs.

Name: பெயர் P. THANGAMANI
Rank: நிலை Inspector of Police, VAC, Salem.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.19/AC/2019 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) and 7 (A) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12 ன் விபரம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

இன்று 11.10.2019ஆம் தேதி மாலை சுமார் 12.00 மணிக்கு சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், ஆய்வுக்குழு அலுவலர், திரு.V.பண்டாரிநாதன் என்பவர் சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.V. பண்டாரிநாதன் ஆய்வுக்குழு அலுவலர், சேலம். பெறுதல் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். அம்மா, சேலம் மாவட்டம், கொளத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.இராமநாதன், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பொறியாளர் திரு.எம்.ராமச்சந்திரன் மற்றும் உதவிப் பொறியாளர் திரு.எம். சரவணன் ஆகியோர் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஊராட்சி ஒன்றிய பொதுநிதியில் இருந்து 48 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 11.10.2019 அன்று டெண்டர் விடப்படுவதாகவும் அந்த டெண்டர்களில் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப் பணிகள் ஒதுக்கீடு செய்வதற்காக அவர்களிடம் இருந்து ஒப்பந்த தொகையில் கமிஷன் தொகை கையூட்டு கேட்டு பெறுவதாக கிடைத்த நம்பத்குந்த ரகசிய தகவலின் பேரில் 10.10.2019 ம் தேதி மாலை சுமார் 5.30 மணி முதல் 11.10.2019 ம் தேதி காலை சுமார் 04.00 மணி வரை நான் மற்றும் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களும் இணைந்து கொளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பொறியாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டோம். இந்த சோதனையானது கொளத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்தில் வடமேற்கு பகுதியில் இயங்கிவரும் பொறியாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது மேற்படி பொறியாளர் பிரிவில் இருந்த ஒன்றிய பொறியாளர் திரு.எம்.ராமச்சந்திரன் என்பவரிடம் விசாரித்ததில் அவர் தான் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பொறியாளராக கடந்த 2 ½ வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும், திரு.சரவணன் உதவி பொறியாளராக பணிபுரிவதாகவும் அவர் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் முகாம் பணியாக சென்றிருப்பதாகவும் தெரிவித்தார். சோதனையின்போது அலுவலகத்தில்

திரு.வி.சிங்காரவேலு பணி மேற்பார்வைபாளர், திரு.சண்முகசுந்தரம், வட்டார ஒருங்கிணைப்பாளர், தொழில்நுட்ப உதவியாளர் என்ற பெயரில் பணிபுரிந்து வரும் தனிநபர்கள் திரு.தேவராஜன், திரு.குமரன் ஆகியோர்கள் ஆஜரில் இருந்தனர். உதவிப் பொறியாளர் திரு.சரவணன் அவர்களின் அறையில் அமர்ந்திருந்த திரு.தேவராஜனிடம் விசாரித்தபோது அவர் கொளத்தூர் வட்டா்ர வளர்ச்சி அலுவலக பொறியாளர் பிரிவு அலுவலகத்தில் தொழில்நுட்ப உதவியாளர் என்ற பெயரில் கடந்த 22 வருடங்களாகப் பணிபுரிந்து வருவதாகவும், தான் பொறியாளர் பிரிவு அலுவலக ஆவணங்களை எழுதுவது, மதிப்பீட்டு அறிக்கை மற்றும் பட்டியல் தயார் செய்வது போன்ற பணிகளை செய்து வருவதாகவும், தான் அரசுப் பணியாளர் அல்ல என்றும், தனக்கு மாதாமாதம் ஒன்றியப் பொறியாளரும் மற்றும் உதவிப் பொறியாளரும் சேர்ந்து தலா ரூ.5,000/-- வீதம் கூலியாக வழங்கி வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் வேறு ஏதாவது பணம் வைத்துள்ளீர்களா என்று கேட்டபோது அவர் கொளத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 14 ஊராட்சிகளில் ஒன்றிய பொது நிதி திட்டத்தின் கீழ் கொளத்தூர் ஒன்றியத்தில் குடிநீர், சாலைவசதி மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்தல் சம்மந்தமான 48 பணிகளுக்கு கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு.ராமநாதன் அவர்களால் டெண்டர் கோரப்பட்டுள்ளதாகவும், 11.10.2010 ஆம் தேதி டெண்டர் விடப்போவதாகவும், மேற்படி டெண்டரில் கலந்து கொள்ளவிருக்கும் ஒப்பந்ததாரர்கள் வைப்பீட்டுத் தொகை மற்றும் ஷெட்யூல் படிவத்தொகை ஆகியவைகளை செலுத்தியபிறகு, அவர்களுக்கு ஒப்பந்தப் பணிகளை ஒதுக்கீடு செய்ய மேற்படி ஆணையாளர் திரு.இராமநாதன், ஒன்றிய பொறியாளர் திரு.எம்.ராமச்சந்திரன் மற்றும் உதவி பொறியாளர் திரு.சரவணன் ஆகியோர்கள் தன்னிடம் ஏற்கனவே ஒப்பந்ததாரர்களிடம் இருந்து கமிஷன் தொகைகளை பெற்று வைத்திருக்கும்படி சொன்ன உத்தரவின்பேரில் தான் ஒப்பந்ததாரர்களிடமிருந்து அந்த தொகைகளை வாங்கி, மேற்படி அறையின் தெற்குபக்க சுவர் ஓரமாக வடக்கு பார்த்து வைக்கப்பட்டிருந்த இரண்டு இரும்பு பீரோக்களில் மேற்கு பக்கமிருந்த பீரோவில் பணத்தினை வைத்திருப்பதாக சொன்னதால் மேற்படி பீரோவின் 5 ஆவது ரேக்கில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களுக்கு இடையில் இருந்த Mirror 5 A Spark of Brilliance OPPO என்ற சுமார் 1 X 1 அடி அளவு கொண்ட மூடியுடன் கூடிய வெள்ளைநிற செல்போன் அட்டைபெட்டியை சோதனை செய்து பார்த்தபோது அதில் பழனி 66000 என எழுதி ஒட்டி வைத்திருந்த ரூ.66,000/--,

மாரியப்பன் 84000 என எழுதப்பட்டு 100 தாள்கள் கொண்ட ரூ.50,000/–த்திற்கான ஐநூறு ரூபாய் நோட்டுகள் கொண்ட ஒரு நோட்டுக் கட்டும் மற்றும் அதனுடன் ரப்பர் பேண்ட் போடப்பட்டு வைக்கப்பட்டிருந்த 68 ஐநூறு ரூபாய் நோட்டுகள் கொண்ட ரூ.34,000/–மும் ஆக மொத்தம் ரூ.84,000/–, மூன்றாவது பண்டலில் 35 முருகேசன் 36,000/– பாலப்பன் 1,06,000/–, கோவிந்தன் 18,000/–, தலைவர் நவப்பட்டி 10,000/– என குறிப்பிடப்பட்டிருந்த தொகைகள் ரூ.1,70,000/–, நான்காவது பண்டலில் Dr. 72000/- என எழுதப்பட்டிருந்த ரூ.72,000/–, ஐந்தாவது பண்டலில் கண்ணன் 36,000/– என எழுதப்பட்டிருந்த ரூ.36,000/– ஆக மேற்படி தொகைகள் ரூ.4,28,000/–மும் சோதனைக் குழுவால் கைப்பற்றப்பட்டது. மேலும் ஒன்றியப் பொறியாளர் திரு.ராமச்சந்திரன் அவர்களின் அறையில் அமர்ந்திருந்த ஒப்பந்ததாரர் திரு. முருகன் அவர்களிடமிருந்து ரூ.8,000/–, மேற்பார்வையாளர் திரு.V. சிங்காரவேலுவிடமிருந்து ரூ.5,000/–, மேற்பார்வையாளர் அறையில் இருந்த கொளத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.K. சண்முகசுந்தரம் அவர்களிடமிருந்து ரூ.5,000/–, சாம்பள்ளி ஊராட்சி அலுவலக ஊராட்சி செயலாளர் திரு.R.சிவக்குமார் அவர்களிடமிருந்து ரூ.5,000/–, மேற்படி பொறியாளர் பிரிவு அலுவலக ஹாலின் கண்ணாடி மற்றும் அலுமினிய பீடிங்கால் தடுக்கப்பட்டிருந்த இரண்டாது தடுப்பில் நின்று கொண்டிருந்த ஒப்பந்ததாரர் திரு. A.லூயிஸ் அவர்களிடமிருந்து ரூ.30,000/–, அதே தடுப்பிற்குள் நின்று கொண்டிருந்த ஒப்பந்ததாரர் திரு.S.யுவராஜ் அவர்களிடமிருந்து ரூ.15,000/–, 3 ஆவது தடுப்பிற்குள் நின்று கொண்டிருந்த திரு.G.சாமிநாதன் அவர்களிடமிருந்து ரூ.10,000/– ஆகிய தொகைகளும் மேற்படி நபர்களால் சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு.வி.ராமநாதன் அவர்கள் ஆஜர் படுத்திய கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வருகைப்பதிவேடு 2019 மற்றும் 2019 களப்பணியாளர்கள் முகாம் பதிவேடு ஊராட்சி ஒன்றியம் கொளத்தூர் ஆகியவைகளும் சோதனைக்குழுவால் கைப்பற்றப்பட்டது, இந்த நடவடிக்கையின்போது ஒன்றியப் பொறியாளர் திரு.எம். ராமச்சந்திரன், பணி மேற்பார்வையாளர் திரு.சிங்காரவேலு, ஊராட்சி செயலாளர் திரு.சிவக்குமார், திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.சண்முகசுந்தரம், தனி நபர்கள் திரு.தேவராஜன், திரு.குமரன், ஒப்பந்ததாரர்கள் திரு.லூயிஸ், திரு. முருகன், திரு. யுவராஜ் மற்றும் திரு.சாமிநாதன் ஆகியோர்களிடம் தனித்தனியாக வாக்குமூலங்கள்

பெறப்பட்டது. இதர விபரங்கள் குறித்து திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட எனது நடவடிக்கைகள் ந.க.எண். ஆ.கு.அ எண்.199/IC-I/2019 நாள் 10.10.2019 மற்றும் நடவடிக்கை சமயத்தில் பெறப்பட்ட வாக்குமூலங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. அவைகள் இந்த புகாருடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.5,06,000/– மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். இந்த நிகழ்வு குறித்து உண்மை நிலை அறிய தக்க புலன் விசாரணை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxxx 11.10.2019 (V.Pandarinathan).

Sir, Received the complaint at 12.00 hrs today on 11.10.2019 and registered a case in Salem Vigilance & Anti-Corruption Cr.No.19/AC/2019 u/s 7 (a) and 7 (A) of the Prevention of Corruption (Amendment) Act 2018 and I took up investigation. Sd xxxx 11.10.2019 P.THANGAMANI, INSPECTOR, V&AC, SALEM.

Original FIR along with original computer typed complaint of Tr.V.Pandarinathan Inspection Cell Officer, Salem, Dharmapuri, Namakkal and Krishnagiri Districts is submitted to the Special Judge for trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(P.THANGAMANI),
INSPECTOR OF POLICE
V&AC, SALEM.